திரு. சு. முத்துசாமி: [1972 மார்ச் 15

நட்டத்தில் ஓடும் வழித்தடங்களுக்கான நிபந்தனைகள்.

* வினா எண் 661—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: அரசு போக்குவரத்து கழகங்கள் கட்டுப்படியாகாத வழித்தடங்களை இயக்குவதற்கு நிதி இழப்பையும், சமூகத்தின் நன்மை கருதி பொருட்படுத்தாமல் நடத்தும் பொருட்டு அரசு விதித்துள்ள நிபந்தனைகள், அளவுகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்துக் கழக நிறுவனம் நல்லபடியாக நடக்க 30 சதவிகித லாபகரமான வழித்தடங்களும், 40 சதவிகித லாப நட்டமில்லாத வழித்தடங்களும், பொதுமக்களின் நன்மையைக் கருதி 30 சதவிகித நட்டத்தில் ஓடும் வழித் தடங்களுடன் இருக்கலாமென அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

திரு. பெ சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு வசதிகளை ஏற்படச் செய்யவேண்டும், தொழிலாளர்களுக்கு வசதிகளை ஏற்படச் செய்ய வேண்டுமென்பதற்காக சில வழித் தடங்கள், நட்டத்தில் ஓடும் வழித் தடங்களாக இருக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், நேற்றைய தினம் நிறைய பேர்கள் போக்குவரத்து மானியத்தின்மீது பேசும்போது 62 சத விகிதம் விரைவுப் பேருந்து வழித் தடங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எனவே, இதைப்பற்றி அரசாங்கம் மறு பரிசீலனை செய்து, சில தடங்கள் இப்போது நட்டத்திலே நடைபெற்றாலும், எதிர்காலத்தில் லாபம் கிடைக்கும் சூழ்நிலை ஏற்படலாம், அப்பேர்பட்ட வழித் தடங்களில் பேருந்துகள் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றையதினம் இன்னும் பலர் பேசியதை விட்டிருக்கிறார்கள். நஷ்டத்தில் ஓடுகின்ற பேருந்துகளைப் பற்றிச் சொன்னார்கள். அதை விட்டுவிட்டார்கள். அரசு எந்தெந்த இடங்களில் மக்கள் நலனைக் கருதி, அங்கே பேருந்துகள் விடவேண்டுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. விரைவுப் பேருந்துகள் ஓரளவுக்கு லாபத்தில் ஓடவேண்டியது மிக அவசியமாகும். நகரப் பேருந்து, அதற்கடுத்து மொபசில் பேருந்து என்றும், எனவே விரைவுப் பேருந்துகள் கொஞ்சம் லாபத்தில் ஓட வேண்டுமென்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறது. நஷ்டத்தில் இருக்குமானால் கொஞ்சம் மாற்று வழி செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள், எடுக்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 25]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். எண் 617, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வண்டி திருவண்ணாமலையிலிருந்து கோவைக்குச் செல்லுகிறது. திருவண்ணாமலையிலிருந்து கோவைக்குச் செல்லும்போது லாபத்தில் செல்லுகிறது. பகலில் திரும்பும்போது கொஞ்சம் நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட வழித் தடங்களைத்தொடர்ந்து நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, போகும்போது லாபம்; வரும்போது நஷ்டம் என்று சொன்னாலும், ஒட்டுமொத்தமாக நஷ்டமாக இருக்கும். எனவே, அதற்கு வேறு வழி செய்ய முடியாது, அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் இந்தத் தனியான பாதையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே என்ன விவரம் என்பதைப் பார்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை—தூத்துக்குடி தோணிப் போக்குவரத்துத் திட்டம்.

வினா எண் 662—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெரிச்சலைக் குறைப்பதற்கு சென்னைக்கும் தூத்துக்குடிக்கும் இடையே கடலோரத் தோணிப் போக்குவரத்து வசதி செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 6வது ஐந்தாண்டு திட்டத்தில் சென்னைக்கும் தூத்துக்குடிக்குமிடையே கடலோரப் போக்குவரத்தை மத்திய அரசு திட்டமாக மேற்கொள்ளுமாறு இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக கடலோரப் போக்குவரத்தைப் பற்றி ஒரு ஆராய்ச்சியை இந்திய அரசு நடத்தி வருகிறது. அது முடிந்த பிறகு மேற்கொண்டு பதிலளிப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருந்து தென் மாவட்டங்களுக்கு தூத்துக்குடி வரையில் இரவிலே காரிலே செல்லுகின்றபோது, எதிரிலே லாரிகளும், பேருந்துகளும் ஹெட் லைட்டைத் தொடர்ந்து போடுகிறார்கள். அதனாலே விபத்துகள் ஏற்பட்டு, உயிர் நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திச் சொல்லி, கடலோரப் பகுதியில் போக்குவரத்தை அமைக்கின்ற வகையில், அதிலே நாமே பூம்புகார் கழகத்தின் மூலம், ஜெர்மன் கப்பல் போன்ற உயர்ந்த விலையில் வாங்காமல், வேறு கப்பல்களை வாங்குவதற்கு.........